(iii) கோவில்பட்டி வட்ட விவசாயிகளிடமிருந்து கடன் பாக்கிகளை மொத்தமாக வசூல் செய்தல்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன். "சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி பின்வரும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க பேரவையின் அலுவலை ஒத்திவைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளு கின்றேன் :

"நெல்லை மாவட்டம் கோவில்பட்டித் தாலுக்காவில் பருவ மழைக் கோளாறால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் விவசாயிகள் கட்ட வேண்டிய பம்புசெட் கடன், கிணறு வெட்ட வாங்கிய கடன் தவணைகளையும், பதினைந்து வருடங்களுக்கு முன் ஜமீன்தாருக்குச் சேரவேண்டியதாகச் சொல்லும் பாக்கிகளையும், மொத்தமாக வசூல் செய்ய ரெவின்யூ அதிகாரிகள் விவசாயிகளின் பம்புசெட்டுகள், ஆயில் இன்ஜின்கள், உழவு மாடுகள் இவைகளை ஜப்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப் பதை விவாதிக்க."

இது சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். 15, 20 வருடங்களுக்கு முன்னால் எட்டையபுர ஜமீனுக்குச் சேரவேண்டியதாகச் சொல்லப்படும் பாக்கிகளை—முன்னால் இருந்த நிலத்தின் உடைமைகளையெல்லாம் வேறொரு வருக்கு மாற்றி, அந்த நிலங்களெல்லாம் கைமாறிய பிறகும் கூட—இப்பொழுது வசூலிக்க முயற்சிக்கப்படுகிறது. இருபது வருஷ பழைய பாக்கிகளையும் இப்பொழுது வசூல் செய்வதற்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சென்ற இரண்டு வருஷங்களாகப் பருவ மழை தவறியதால், அரசாங்கமே ஒத்திவைத்த அந்தக் கடன் தவணைகளையும், இந்த வருடம் செலுத்தவேண்டிய கடன் தவணையையும் சேர்த்து இரண்டு மூன்று தவணைகளையும், பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இருந்த பாக்கிகளையும் ஒட்டு மொத்தமாகக் கொடுக்கவேண்டும் என்று விவசாயிகளைக் கட்டாயப் படுத்தி, அவர்கள் கொடுக்க முடியாத கஷ்டமான நிலை இருப்பதையும் பாராமல், அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு அத்தியாவசியமாக உள்ள பம்பு செட்டுகளையும், ஆயில் என்ஜின் களையும் இயங்கவிடாமல் ஸீல் வைப்பதிலும், அவற்றை ஜப்தி செய்வதிலும் அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதால், விவசாயிகளுக்கு அதிகமான இன்னலை ஏற்படுத்துகிறது. ஆகவே, இது சம்பந்த மாக விவாதிப்பதற்கு அவை அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானமும் அரசாங்கத்தின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியங்களில் ஒன்றாக இருந்தாலும்,

1968 பிப்ரவரி 16] [திரு. கே. ஏ. மதியழகன்]

அவர்கள் சொன்ன வாதத்திற்கு முற்றிலும் மாறுன செய்திகள் அங்கிருந்து இந்த அரசுக்கு வந்திருப்பதாலும், உறுப்பினர் அவர்கள் இதை ஒரு வியாஜ்யமாக ஆக்கிய காரணத்தாலும், அதைப்பற்றி சில வார்த்தைகள் இங்கே சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில்பட்டி தாலுக்காவில் பருவ மழை தவறிவிட்டது என்ற காரணத்தைக் காட்டி இந்த அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கோருகிறார்கள். ஆனல் பொதுவாகப் பருவ மழை கெட்டிருந்தாலும், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மற்ற இடங்களைக் காட்டிலும், கோவில்பட்டியில் ஓரளவு மழை பெய்து, ஏற்கனவே நல்லமுறையில் சீர்திருத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ள குளங்களிலெல்லாம் தண்ணீர் தேங்கும்படியான நிலை வந்திருக்கிறது. பத்தாயிரம் ஏக்கர் நெல் சாகுபடி இன்றைக்கு அறுவடையாவதற்குக் கோவில் பட்டித் தாலுக்காவில் தயாராய் இருக்கிறது. அங்கே அதிகமாகப் பயிராகிற பருத்தி, கம்பு போன்றவை நல்ல பயிராகத்தான் இருக்கின்றன. கொத்தமல்லி போன்றவை வேண்டுமானல் கொஞ்சம் சீர்கெட்டிருக்கலாம் என்ற நிலைமை இருக்கலாமே தவிர, திருநெல்வேலி மாவட்டத்தில் மற்றப் பகுதிகளைப் பார்க்கும்போது, கோவில்பட்டி தாலுக்காவில் பருவ மழை ஓரளவு பெய்திருக்கிறது என்றே சொல்லலாம். அதன் காரணமாக, கண்மாய்கள் நிறைந்து, பாசன வசதி ஏற்பட்டு, பத்தாயிரம் ஏக்கர் பயிராகியிருக்கிற நிலை இருக்கிறது. சாதாரணமாகக் கடன் வசூலிக்கப்படுகிற ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு, பேராபத்து இருக்கிறது என்று சொல்வது சரியான விவரங்களை அடிப்படையாக வைத்துச் சொல்லப்பட்டவை அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சற்று நேரத்திற்கு முன்னல், திருநெல்வேலி மாவட்டக் கலெக்டருடன் தொடர்பு கொண்டு விசாரித்து நிலைமையைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் கொடுக்கும் தகவல்களின்படி, திருநெல்வேலி மாவட்டத்தின் மற்ற இடங்களைக் காட்டிலும் கோவில்பட்டித் தாலுக்காவில் நிலைமை ஓரளவு நன்ருக இருக்கிறது என்றே தெரிய வருகிறது. உண்மையான கோரிக்கையாக இருந்தால் எப்போதும் இந்த அரசாங்கம் கவனிக்கத் தயாராக இருக்கும். ஆனல், அதையே ஒரு பொதுக் காரியமாக ஆக்குவது சரியானதல்ல என்று தெரிவித்துக் கொள்வதோடு, இது உடனடிப் பொது முக்கியமுள்ள குறிப்பிட்ட ஒரு காரியமல்ல. அவையை ஒத்திவைப்பதற்குரியதல்ல, ஆகவே, தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.